12-2-14

Register No [redacted]

12 R

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு – 2024

## தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

6 x 1 = 6

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) ஆமந்திரிகை | – | 1) பட்டத்து யானை |
| ஆ) அரசு உவா | – | 2) மூங்கில் |
| இ) கழஞ்சு | – | 3) இடக்கை வாத்தியம் |
| ஈ) கழை | – | 4) எடை அளவு |

அ) 3, 1, 4, 2 ஆ) 4, 2, 1, 3 இ) 1, 2, 3, 4 ஈ) 4, 3, 2, 1

2. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்............

அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்

3. எளியது, அரியது என்பன

| | | |
|---|---|---|
| அ) தீயினத்தின் துணை | – | நல்லினத்தின் துணை |
| ஆ) சொல்வது | – | சொல்லியபடி செய்வது |
| இ) சிறுமை பல செய்வது | – | பகைவர் தொடர்பு |
| ஈ) மெய்ப்பொருள் காண்பது | – | உருவுகண்டு எள்ளாதது |

4. ‘சாபவிமோசனம்’, ‘அகலிகை’ கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

5. முச்சந்தி இலக்கியம் என்பது

கூற்று 1 : கதை வடிவிலான வடிவம் உடையது.

கூற்று 2 : பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, 2 சரி

6. புலம் பெயர்ந்து வாழும் இருப்புகளையும் வலிகளையும் சொல்லும் பாத்திரமான மொழி யாருடையது?

அ) தமிழ்நதி ஆ) வெ. இறையன்பு இ) நகுலன் ஈ) ஐராவதம் மகாதேவன்

### பகுதி – II

4 x 2 = 8

நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

7. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக.

8. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்
தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து –
இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.

9. அறிவுடைவேந்தனின்நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?

10. பருவத்தே பயிர்செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

11. பின்னணி இசை, படத்தின் காட்சியமைப்புக்கு எப்வவாறு உயிரூட்டும்? சான்று தருக.

### பகுதி – III

4 x 2 =

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

12. அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடருக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.
முருகன்..........(வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
13. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.
ஊண் – ஊன்.
14. இலக்கணக் குறிப்பு தருக : ஆடலும் பாடலும், அறியா
15. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.
16. கலைச்சொல் தருக : Internet Banking, Animation.

பகுதி – IV

2 x 4 = 8

**இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

17. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
18. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை?
19. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

பகுதி – V

2 x 4 = 8

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.**

20. சொற்பொருள் பின்வருநிலையணி
**(அல்லது)**
21. பாடாண் திணை **(அல்லது)**
செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.

பகுதி – VI

1 x 6 = 6

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவான விடை தருக.**

22. திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.
**(அல்லது)**
சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? – விளக்குக.

பகுதி – VII

4 + 2 = 6

**அடிமாறாமல் எழுதுக.**

23. 'குழல்வழி...' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.
24. 'செயல்' என முடியும் குறள்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com